# DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.166/2024.
Prosecution witness for P.W.10.

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. அல்லிதுரை. | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.04.2025.

A2 present. A1, A3 custody.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது கோவில்பட்டியில் குடியிருந்து நிதி நிறுவனம் நடத்தி வருகிறேன். இறந்துபோன ஆர்.கே.துரை என் உடன் பிறந்த அண்ணன். ஆஜர் எதிரி அவரது மருமகன். அ.சா.1 என் தம்பி. 01.04.2024 அன்று என் அண்ணன் ஆர்.கே.துரைக்கு விபத்து ஏற்பட்டதாக அ.சா.1 எனக்கு கைபேசி மூலம் தகவல் சொன்னார். நான் கோவில்பட்டியிலிருந்து எட்டையபுரம் மருத்துவமனைக்கு வந்து பார்த்தேன். அப்போது பிரேதம் பிணவறையில் இருந்தது. அவருக்கு தலையே இல்லை. தலை நசுங்கி பாதி பகுதிதான் இருந்தது. உடலில் அனைத்து பகுதிகளிலும் காயங்கள் இருந்தது. மேற்படி சம்பவம் விபத்து என்று சொல்லி ஆய்வாளர் எங்களை அனுப்பிவிட்டார். மூன்று நாட்கள் கழித்து எட்டையபுரம் காவல்நிலையத்திலிருந்து எனக்கு கைபேசி மூலம் தகவல் வந்தது. நானும், அ.சா.1–ம், அசா.9 ம் எட்டையபுரம் காவல்நிலையத்திற்கு போனோம். போலீசார் மேற்படி சம்பவம் விபத்து அல்ல என்றும், கொலைதான் என்றும் சொன்னார்கள். நான் என் அண்ணியிடம் என்ன பிரச்சனை என்று கேட்டபோது 2 ம் எதிரிக்கும், என் அண்ணனுக்கும் கொடுக்கல் வாங்கல் பிரச்சனை இருந்ததாக என் அண்ணியும், அ.சா.3 ம் சொன்னார்கள். 2 ம் எதிரி லாரி ஓட்டுநரை வைத்து அடிக்க சொன்னதாக போலீசார் சொன்னார்கள். கோவில்பட்டி – எட்டையபுரம் சாலையில் குமாரகிரி

என்ற கிராமத்திற்கு அருகில் சிகேடி பள்ளி அருகில் லாரி வைத்து மோதியதாக கேள்விப்பட்டேன். என் அண்ணனின் இறுதி சடங்கு முழுவதும் மூன்று நாட்களாக 2ம் எதிரி எங்களுடன்தான் இருந்தார். ஆய்வாளர் மருத்துவமனையில் பிரேத விசாரணை செய்யும்போது நானும் உடனிருந்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

02.04.2024 அன்று ஆய்வாளர் என்னை விசாரித்தார். 03.04.2024 அன்று 2ம் எதிரியை போலீசார் நிலையம் அழைத்து சென்றுவிட்டார்கள். போலீசார் என்னை அதற்கு பிறகு விசாரிக்கவில்லை. 03.04.2024 அன்று 2ம் எதிரியை அழைத்துச் சென்ற போலீசார் அவரை அப்படியே நீதிமன்ற காவலுக்கு உட்படுத்திவிட்டார்கள் என்றால் சரிதான். போலீஸ் விசாரணையில் 01.04.2024 அன்று அ.சா.1 எனக்கு கைபேசி மூலம் தகவல் சொன்னதாக சொல்லியுள்ளேன். 03.04.2024 அன்று காவல் நிலையத்திலிருந்து எனக்கு கைபேசி மூலம் தகவல் வந்ததாகவும், அதன் அடிப்படையில் நான் எட்டையபுரம் காவல்நிலையம் சென்றதாகவும் போலீஸ் விசாரணையில் சொல்லவில்லை. நான் என் அண்ணியிடம் கேட்டதாகவும், என் அண்ணியும், அ.சா.3ம் கொடுக்கல் வாங்கல் சம்பந்தமாக பிரச்சனை இருந்ததாக என்னிடம் சொன்னதாகவும் போலீஸ் விசாரணையில் சொன்னேன். என் அண்ணன் ஆர்.கே.துரை உயிருடன் இருந்த வரையில் எங்கள் குடும்பத்தில் நடக்கும் நல்லது கெட்டது விசயங்களில் அவர் கலந்து கொள்ளவில்லை என்றால் சரியல்ல. என் அண்ணன் ஆர்.கே.துரை பணம் கொடுக்கல் வாங்கல் சம்மந்தமாகவும் அவரது வியாபாரம் சம்மந்தமாகவும் தன்னை தவிர வேறு யாரையும் நம்பமாட்டார் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பவத்திற்கு முன்பாக எங்கள் குடும்பத்தில் பூர்வீக சொத்து சம்பந்தமாக பிரச்சனை இருந்து வந்தது என்றால் சரியல்ல. தற்போது சொத்தை பிரித்துக் கொண்டோம். மேற்படி ஆர்.கே.துரை உயிருடன் இருந்த வரையில் எங்கள்

குடும்பத்தில் எந்த விழாவிலும் கலந்து கொண்டதில்லை என்றும், எங்களுடன் உறவாடியதும் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. எங்கள் குடும்பத்தில் பாகப்பிரிவினை சம்பந்தமாக பிரச்சனை இருந்ததாகவும், ஆர்.கே.துரையின் சொத்துக்களை கையாள்வது சம்பந்தமாகவும் பிரச்சனை இருந்ததால் அவர் எங்களுடன் சுமூக உறவில் இருந்ததில்லை என்றால் சரியல்ல. 2ம் எதிரி அ.சா.3–ஐ திருமணம் செய்த பிறகு 2ம் எதிரியால்தான் மேற்படி ஆர்.கே.துரை எங்கள் குடும்பத்தோடு சேராமலும், பாகப்பிரிவினைக்கு உட்படாமலும் இருந்ததாக நாங்கள் அவரோடு பகைமையில் இருந்தோம் என்றால் சரியல்ல. அதனால்தான் தற்செயலாக ஆர்.கே.துரைக்கு ஏற்பட்ட விபத்தை சாதகமாக்கி கொண்டு 2ம் எதிரிக்கு எதிராக பொய்யான ஆவணங்களை உற்பத்தி செய்து அவரை இந்த வழக்கில் சிக்க வைத்திருக்கிறோம் என்றால் சரியல்ல. அதனால்தான் 2ம் எதிரி சிறைக்கு சென்ற பிறகு எங்கள் குடும்ப சொத்துக்களை பாகம் செய்திருக்கிறோம் என்றால் சரியல்ல. 2ம் எதிரி வெளியில் இருந்தால் ஆர்.கே.துரையின் சொத்துக்களை விற்பனை செய்து அதில் நாங்கள் அடையும் லாபத்தை 2ம் எதிரி தடுத்துவிடுவார் என்பதால் போலியான ஆவணங்கள் மூலம் 2ம் எதிரியை சிக்க வைத்து சிறைக்கு அனுப்பிவிட்டோம் என்றால் சரியல்ல. முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகள் நான் கேள்விப்பட்ட சங்கதிகள் என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

1, 3 எதிரிகள் தரப்பில் மேற்படி குறுக்கு விசாரணை ஏற்றுக் கொள்ளப்பட்டது.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

M THANDAVAN
Digitally signed by M THANDAVAN
Date: 2025.04.09 18:06:31 +0530

I Additional District & Sessions Judge,
Thoothukudi.

**DEPOSITION OF WITNESS**

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.166/2024.
Prosecution witness for P.W.11.

| | | | |
|---|---|---|---|
| Name | ... **திரு. சதீஷ்.** | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.04.2025.

A2 present. A1, A3 custody.

முதல் விசாரணை

நான் தற்போது கோவில்பட்டியில் குடியிருந்து கோவில்பட்டி – எட்டையபுரம் சாலையில் பாரத் பெட்ரோலியம் பங்க் வைத்து நடத்தி வருகிறேன். சியாமளா Fuels என்ற பெயரில் நடத்தி வருகிறேன். இறந்துபோன ஆர்.கே.துரை என்பவரை தெரியாது. ஆஜர் எதிரியை தெரியாது. 2024ம் ஆண்டு ஏப்ரல் 2ம் தேதி அல்லது 3ம் தேதி மேற்படி பெட்ரோல் நிலையத்தில் வேலை செய்யும் லெட்சுமணன் எனக்கு கைபேசி மூலம் தொடர்பு கொண்டு எட்டையபுரம் போலீசார் பெட்ரோல் நிலையத்திலிருந்த கண்காணிப்பு கேமரா பதிவுகளை கேட்டதாக சொன்னார். அதை கொடுக்கும்படி நான் சொல்லிவிட்டேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

போலீஸ் விசாரணையில் 2024ம் ஆண்டு ஏப்ரல் 2ம் தேதி அல்லது 3ம் தேதி மேற்படி லெட்சுமணன் எனக்கு கைபேசி மூலம் தொடர்பு கொண்டு போலீசார் கண்காணிப்பு கேமரா பதிவுகளை கேட்டதாக சொன்னேன். எங்கள் பெட்ரோல் நிலையத்தில் பணியாளர்கள் குறித்த வருகை பதிவேடு உள்ளது. எங்கள் நிலையத்தில் கைரேகை பதிவு கிடையாது. வருகை பதிவேட்டில்தான் சுருக்கொப்பம் இடுவார்கள். ஊழியர் ஒவ்வொருவருக்கும் அடையாள

அட்டை வழங்கப்பட்டுள்ளது. மேற்படி லெட்சுமணன் எங்கள் நிலையத்தில் பணியில் இல்லை என்றும், அப்படி ஒருவர் எங்கள் பெட்ரோல் நிலையத்தில் பணியமர்த்தப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. மேற்படி லெட்சுமணன் காவல்நிலைய கையிருப்பு சாட்சி என்றால் எனக்கு தெரியாது. நான் மேற்படி பெட்ரோல் நிலையம் வைத்திருப்பதால் போலீசாருடன் சுமூக உறவில் இருக்க வேண்டுமென்றால் சரிதான். அதனால் போலீசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க என்னிடம் பணியில் இல்லாத நபர் பணியில் இருந்ததாகவும், மேற்படி கண்காணிப்பு கேமரா பதிவுகளை நான் அவரிடம் கொடுத்துவிடச் சொன்னதாகவும் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

1, 3 எதிரிகள் தரப்பில் மேற்படி குறுக்கு விசாரணை ஏற்றுக் கொள்ளப்பட்டது.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

M THANDAVAN

Digitally signed by M THANDAVAN
Date: 2025.04.09 18:06:41 +0530

I Additional District & Sessions Judge,
Thoothukudi.